முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கண்ணப்பநாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

25.11.2018, ஞாயிற்றுக்கிழமை

1. **அருள் தரும் குருவே அரங்கா**
**அவதார வள்ளலே குருராஜா**
**பொருள்பட கலியிடர் வெல்லும்**
**புண்ணியம் வளர்க்கும் தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி தேள் திங்கள்**
**அறிவிக்க நவதிகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிற்றுக்கிழமை)**
3. **வாரமதில் கண்ணப்ப நாயனார்**
வழங்கிடுவேன் உலகோர் நலம்பெற
சோரமிலா ஞானயுகம் அமைய
சுபிட்சமான காலநிலைகள் மாற
4. மாறவே கலிவாழ் மக்கள்
மண்ணுலகில் தயவை வளர்த்து
அறமதை பெருக்க வேணும்
ஆன்மீக உண்மை நெறிக்கு வர வேணும்
5. வேண்டுதல் வைத்து நித்தநித்தம்
வேலவன் சக்தி பலம் பெற்ற
தொண்டுவழி இயக்கம் புரியும்
தேசிகன் வருகைபட உணர வேணும்
6. வேண்டி அரங்கன் அமைத்த
வினை வெல்லும் ஏழாம் படை வீட்டை
கண்டுமே வணங்கி சரணடைந்து
கட்டாயம் சீடர்களாகி சேவை
7. சேவை கலந்து பொருளுதவி
செய்து செயல்பாட்டிலும் கலந்து
அவசியம் தொண்டு புரிய வேண்டி
அகிலமெங்கும் அரங்கன் பெருமை பகிர வேணும்
8. வேண்டியே ஞான பண்டிதனாம்
வேலவன் தலைமை வருகின்ற
தொண்டதனை பெருக்கியே
தேசிகன் வழியை தொடர வேணும்

9. தொடரவே மக்களுக்குள் தெளிவு
தீவினை எண்ணம் குணம் விலகி
இடரென்பது இல்லாத நிலை
எங்கும் எதிலும் நல்வினை பெருகி

10. பெருகியே ஆறுமுகனார் வரும்
பேரின்ப ஞானயுக காலம்
ஆறுமுக அரங்கனால் அமையும்
அகிலமே ஞானஆட்சி கனிந்து

11. கனிந்து கலி ஆக்கினைகள்
காலம் கடத்தா முழுதும் விலகி
இனிமையான ஞானிகள் ஆட்சி
எல்லா தேசமும் அடையக் கூடும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கண்ணப்பநாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அருளை மக்களுக்கு வாரி வழங்கும் அருட்குருவே அரங்கனே தேசிகனே முருகப்பெருமானின் அவதாரமே வள்ளலே வள்ளல் ஞானியே, கலியுகத்தின் துன்பங்களை வென்று உலகினில் புண்ணியங்களை வளர்க்கின்ற ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே குருராஜனே அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 9ம் நாள் 25.11.2018, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கண்ணப்பநாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கண்ணப்பநாயனார்.

குற்றங்கள் இல்லாத வீண் போகாத ஞானயுகம் இவ்வுலகினில் அமைந்திட சுபிட்சம்மிக்க நல்ல காலநிலைகள் பருவநிலைகள் உண்டாகிட உலகினில் இயற்கை சமச்சீராக ஆகிட கலியுகத்தினில் வாழும் மக்களெல்லாம் தயவு உணர்வினை பெருக்கிக் கொள்ள வேண்டும். தருமங்களைத் தாராளமாக செய்து அறத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும். உலகினில் உண்மை ஆன்மீக நெறி பரவ வேண்டும். மக்கள் உண்மை ஆன்மீக நெறிக்கு வர வேண்டும்.

அனுதினமும் உலகம் நலம் பெற வேண்டுமென பன்னெடுங்காலமாய் தவமாய் தவமிருந்து முருகப்பெருமானின் சக்திகளை முழுமையாகப் பெற்றிட்ட அரங்கமகா தேசிகனும் அரங்கனைப் பின்பற்றி உலக நலனிற்காக பாடுபடுகின்ற இயக்கத்தைப் பற்றியும் உலக நலனே உயிர் மூச்சாகக் கொண்டு தமது தவப்பலனையெல்லாம் அறசக்தியாக மாற்றி இக்கலியுக மக்களின் துன்பங்களைப் போக்கி காக்கின்ற அவதார ஞானி அரங்கமகா தேசிகனாரின் வருகையையும் அவதார நோக்கத்தையும் உணர வேண்டும்.

உலகப் பெருமாற்றம் கருதியே சர்வ வல்லமையுடன் ஏழாம் படை வீடாக துறையூர் ஓங்காரக்குடிலினை அமைத்திட்டார் அரங்கன். வல்லமைமிக்க ஏழாம் படை வீட்டின் சக்தியை நோக்கத்தை உலகோர் உணர்ந்து குடிலினை நாடிச் சென்று பயபக்தியுடன் வணங்கி அரங்கமகானின் திருவடிகளிலே சரணடைந்து அரங்கனுக்கு சீடர்களாக உறுதியுடன் ஆகி, அரங்கன் உலக நலனிற்காக செய்கின்ற எல்லையில்லா தானதருமப் பணிகளில் அவர்களும் கலந்து கொண்டு தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்தும் பயபக்தியுடன் பக்தி செய்தும் வர வேண்டும்.

உத்தம மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வருகையையும், அவதார நோக்கத்தையும், அரங்கனின் பெருமைகளையும், உலகப்பெருமாற்றத்தின் அவசியத்தையும் உலகமெங்கும் தொண்டுகளாய் தமது கடமையாய் எண்ணி பரப்பிட வேண்டும்.

ஞானபண்டிதன் முருகப்பெருமானே தலைமை ஏற்று நடத்த இருக்கும் உலகப்பெருமாற்ற தொண்டுகளையும் செயல்பாடுகளையும் ஆறுமுக அரங்கமகா தேசிகனைப் பின்தொடர்ந்து சென்று பயபக்தியுடன் செய்திட வேண்டும்.

இவ்விதமே அரங்கனை பின்தொடர்ந்து ஆறுமுக அரங்கனைப் பின்தொடர்ந்து தொண்டர்களும், மக்களும் செயல்பட உலக மக்களிடையே உள்ள அறியாமை நீங்கி தெளிவு உண்டாகும். தீமையான எண்ணங்களும், குணங்களும் அவர்களை விட்டுவிலகி நல்லெண்ணமும் நற்செயல்களும் பெருகி துன்பங்கள் ஏதும் இல்லாத நிலை உலகினில் உருவாகி எங்கும் எதிலும் நல்வினையாக செயல்பாடுகளெல்லாம் செயல்படுத்தப்பட்டு நல்வினை பெருகி, முருகப்பெருமானே நேரில் தோன்றி ஆட்சி செய்கின்ற பேரின்ப ஞானயுக காலம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரால் இவ்வுலகினில் உருவாகும். உலகம் முழுதும் மனிதர்களின் ஆட்சி ஒரு முடிவிற்கு வந்து ஞானிகள் ஆளும், ஞானவான்கள் ஆளும் ஞானஆட்சியும் கனிந்து கலியுகத்தின் துன்பம் விலகி சூழ்நிலைகள் எல்லாம் இவ்வுலகினில் இருந்து விரைந்து விலகி இனிமையும், அன்பும், சமாதானமும், சந்தோசமும்மிக்க நல்ஆட்சி ஞானிகள் ஆட்சி பண்புடைய மக்களால் ஞானிகள் தலைமையில் எல்லா தேசங்களிலும் உருவாகி உலகமே நன்மை பெறும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கண்ணப்பநாயனார்.

–சுபம்–